(Reg. No. 961/1997)

# செய்திமடல்



*நோபல் லாரேட்*

# அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்

துணை அமைப்பு

# அன்னை தெரசா பேரவை

அலுவலகம் :43, நெல்சன்மாணிக்கம் சாலை, சூளைமேடு, சென்னை –600 094
**போன்: 91-44-23743883 Fax: 91-44-23742699 Web: www.motherteresacharities.org**
Email: motherteresain@yahoo.co.in / mtct1997@yahoo.co.in

**சென்னை நவம்பர் 10, 2010**

பேரன்புடையீர்,

வணக்கம். அன்னை தெரசா பேரவையின் நவம்பர் மாத செய்தி மடல் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்ற வகையில் உத்தரபிரதேச மாநில அன்னை தெரசா பேரவை சார்பில் அம்மாநில நிர்வாகிகள் தற்போது நான்கு மாவட்டங்களுக்கு நிர்வாகிகளை நியமித்துள்ளார்கள். முன்று மாவட்டங்களில் தனி அலுவலகங்களும் திறக்கப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார்கள். அதே போல் ஜார்க்கண்ட் மாநிலத்திலும், உறுப்பினர் சேர்க்கை விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. மாநகர் டில்லியிலும், விரைவில் கமிட்டி அமைப்பதாக அம்மாநிலத்தலைவரும், அகில இந்திய பொதுசெயலாளரும் உறுதி கூறியுள்ளார்கள்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலும் உறுப்பினர் சேர்க்கை விரைவுபடுத்தப்பட்டுவருகிறது. மாவட்ட கமிட்டிகள் அமைக்கப்படாத மாவட்டங்களாகிய கரூர், விழுப்புரம் மாவட்டங்களுக்கும் புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறையும் நமது அன்னை தெரசா அறக்கட்டளையும் இணைந்து தொழில் முனைவோர் பயிற்சி (EDP) மதுரை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் முறையே 8.11.2010 மற்றும் 20.11.2010 ஆகிய தினங்களில் ஆரம்பிக்க உள்ளது. இப்பயற்சி ஆறு வாரகால பயிற்சி ஆகும். ஊணவுபதப்படுத்துதல் துறையில் தொழில் ஆரம்பிப்பதற்கு இப்பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இப்பயிற்சியில் மேற்கண்ட மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோரை சேர்த்து பயனடையுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

அன்னை தெரசா அவர்கள் நூற்றாண்டை முன்னிட்டு, முதற்கட்டமாக தமிழக அரசு சார்பில் மகளிர் சுயஉதவிகுழு வணிகவளாகத்திற்கு அன்னை தெரசா அவர்கள் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது நம்முயற்சியால் பெற்ற பலன் ஆகும். மேலும், மிக விரைவில் அன்னை தெரசா நூற்றாண்டுவிழா தமிழகத்தில் தமிழக அரசால் நடத்தப்பட உள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நம் அன்னை தெரசா பேரவை சார்பிலும் மாவட்டந்தோறும், ஒரு விழா நடத்தவேண்டும். அதற்காக இப்போதே நாம் திட்டமிட்டு அதற்கான வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். அன்னை தெரசா பேரவை, தமிழக

கமிட்டி சார்பில் வருகிற ஜனவரி மாதம் 3–ம் வாரத்தில் சென்னையில் ஒரு மாபெரும் விழா நடத்த மாநில கமிட்டி ஆலோசனை செய்துவருகிறது.

எனவே ஒவ்வொரு மாவட்ட, மாநில, நிர்வாகிகள் இன்றைக்கே அதற்கான பணிகளை துவக்க வேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

அன்பின்

**ஜி.கே.தாஸ்**
நிறுவனர்

## கண்தானம் செய்த ஆட்டோ ஓட்டுநர்:

அன்னை தெரசா ஆட்டோ ஓட்டுநர் நலசங்கத்தின் நுங்கம்பாக்கம் ரயில்நிலைய கிளை உறுப்பினர் K.சங்கர் ஓட்டி சென்ற ஆட்டோ டாங்கர் லாரியில் மோதி கடந்த 23.10.2010 அன்று விபத்துக்குள்ளானது. ஆட்டோ உருத்தெரியாமல் நசுங்கியது. படுகாயமடைந்த ஆட்டோ டிரைவர் ஆபத்தான நிலையில் சென்னை பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

உயிர் பிரியும் தருவாயில் அவர், டாக்டர்களிடம் தன் கண்களை தானமாக கொடுப்பதாக கூறிவிட்டு உயிர் துறந்தார். அதன்படி அவர் இருகண்களும் அகற்றப்பட்டு வேறு நபருக்கு பொருத்தப்பட்டது.

ஆட்டோ ஓட்டுநர் சங்கருடைய மனிதாபிமானம் அனைவராலும் பாராட்டப்பட்டது. அன்னை தெரசா பேரவை சார்பில் அவர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

## ஆட்டோ ஓட்டுநர் நல சங்க செய்திகள்:

கடந்த 17.10.2010 மாலை 5.00 மணிக்கு ரயில்வேகாலனி 3வது தெருவில் உள்ள நமது ஆட்டோ ஸ்டாண்டில் அதன் தலைவர் கோபிநாத் தலைமையில் நடந்த ஆயுதபூஜையில் நமது நிறுவனர் திரு.ஜி.கே.தாஸ் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். மாநில பொருளாளர் M.R. பாலசுப்பிரமணியம் ,தென் சென்னை மாவட்டத்தலைவர் சிவாஜிநாதன், ஆட்டோ சங்க மாநில தலைவர் நந்தகோபால், மாநில துணைத்தலைவர் கந்தன், மாநில பொருளாளர் K.சங்கர், பொதுசெயலாளர் V.M.K.மகேந்திரன், சங்க செயலாளர்கள் சதீஸ்,பொருளாளர் செபாஸ்டீன் ஜோதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

17.10.2010, மாலை 7.00 மணியளவில் சேத்துபட்டு பிருந்தாவன்



நகரில் புதிய ஆட்டோ சங்க திறப்புவிழா சங்க தலைவர் S.முரளி தலைமையில் நிறுவனர் திரு.ஜி.கே.தாஸ் பெயர் பலகை திறந்துவைத்து சிறப்புரையாற்றினார். ஏழை எளிய மாணவ, மாணவிகளுக்கு நோட்டுபுத்தகம், பேனா, வழங்கினார். அவரை தொடர்ந்து மாநில பொருளாளர் M.R.பாலசுப்பிரமணியம், மாநில துணைத் தலைவர் பாடி நாகராஜன், தென்சென்னை மாவட்ட துணைத்தலைவர் சிவாஜிநாதன், எழும்பூர் தொகுதி தலைவர் எட்வின், ஆட்டோ சங்க மாநில தலைவர் நந்தகோபால், மாநில பொதுசெயலாளர் V.M.K.மகேந்திரன், மாநில பொருளாளர் K.சங்கர் ,தங்கையாசாமி, சங்க துணைத் தலைவர் S.பெருமாள், செயலாளர் D.ரஞ்சித்குமார், துணைச்செயலாளர் C.டோமினிக், பொருளாளர் V.R.K.ஜனா, ஆலேசகர் T.பிரகாஷ், ஜெயசீலன், P.ஏசு, T.போக்கீஸ்வரன், மு.ஞானவேல், D,விஜய்,G.ஜெயா,P.வரதன்,K.மதன், திருவேங்கடம், ரகு, மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.



கடந்த 24.10.2010 அன்று காலேஜ்ரோடு DPI ஆட்டோ நிறுத்தத்தில்

அதன் தலைவர் D.பாபு அவர்கள் தலைமையில் ஆயுதபூஜை நடைபெற்றது. நமது நிறுவனர் திரு.ஜி.கே.தாஸ் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். மாநில பொருளாளர் M.R. பாலசுப்பரமணியம், ஆட்டோ சங்க மாநில தலைவர் நந்தகோபால், மாநில செயலாளர் V.M.K மகேந்திரன், மாநில பொருளாளர் K.சங்கர், சங்க செயலாளர் J.P.வில்லியம்ஸ் பொருளாளர் R.ஜெகதீஸ், சங்க உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

25.10.2010 அன்று இரவு 7.00 மணிக்கு வீராபுரம் ஆவடி, புதிய கன்னியம்மன் நகர் ஆட்டோ ஸ்டாண்டில்



தலைவர் ஞானவேல் தலைமையில் ஆயுதபூஜை நடைபெற்றது. நமது நிறுவனர் திரு.ஜி.கே.தாஸ் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாநில பொருளாளர் M.R.பாலசுப்பிரமணியம், திருவள்ளுர் மாவட்டத்தலைவர் S.குணசேகரன், வடசென்னை மாவட்ட பொதுசெயலாளர் K.மோகன்ராவ், எழும்பூர் பகுதி தலைவர் எட்வின், ஆட்டோ சங்க தலைவர் நந்தகோபால், மாநில பொதுசெயலாளர் V.M.K.மகேந்திரன், மாநில பொருளாளர் K.சங்கர், சங்க செயலாளர் M.K.ரமேஷ், பொருளாளர் நாகராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த 31.10.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு வில்லிவாக்கம் ICF அருகில் ஆட்டோ ஸ்டாண்டு திறக்கப்பட்டது. சங்க தலைவர் பாஸ்கர் தலைமையில் நமது நிறுவனர் பெயர்பலகை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். மாநில பொதுசெயலாளர் V.M.K.மகேந்திரன், மாநில பொருளாளர் K.சங்கர் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்

கடந்த 2.11.2010 செவ்வாய்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு சவுராஸ்டிராநகர் 1வது தெரு, ரயில்நிலையம் அருகில் உள்ள நமது ஆட்டோ நிறுத்தத்தில் தலைவர் J.அசோக் முன்னிலையில் ஆயுதபூஜை நடைபெற்றது. நமது நிறுவனர் திரு.ஜி.கே.தாஸ் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார் மாநில நிர்வாகிகள், சங்க துணைத் தலைவர் A.சரவணன், செயலாளர் V.வெங்கட், துணை செயலாளர் G.பெருமாள், பொருளாளர் லோகேஷ் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை தொழில் முனைவோர் பயிற்சி (EDP) - மதுரை மாவட்டம்**



மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சகமும் நமது அன்னை தெரசா அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் உணவு பதப்படுத்துதலில் தொழில் முனைவோர் பயிற்சி (EDP) மதுரை மாவட்டத்திலுள்ள ஹோட்டல் வீமாஸ் இன்டர்நேஷனல், 8.11.2010 அன்று மாலை 6.00 மணி அளவில் துவங்கப்பட்டது. நமது நிறுவனர் திரு.ஜி.கே.தாஸ், M.A., BAL., DLAL, அவர்கள் குத்துவிளக்கேற்றி முகாமை துவங்கி வைத்தார். மாநில துணைப்பொதுசெயலாளரர் திரு.R.. வெங்கடேசன்,M.A.,BL அவர்கள் தலைமை தாங்கினார்.

டிரஸ்டி.A.சேவியர், மாநில பொருளாளர் திரு.M.R.பாலசுப்பிர மணியம், எழும்பூர் தொகுதி தலைவர் L.எட்வின்,தென்சென்னை மாவட்ட செயலாளர் திரு.சிவாஜிநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்




மதுரை மாவட்ட ஆட்சியர் திரு.C.காமராஜ்,IAS அவர்கள்சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சி முகாமை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் மதுரை, திரு.S.முருகையா, மாவட்ட ஆளுநர் திரு.A.புருஷோத்தமன், தலைவர் உணவக மேலாண்மை துறைபேராசிரியர் R.கண்ணன், MLC., MDM., M.Phil., மகளிர் நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் செயலாளர் திருமதி.C.பாக்கியலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மேலும் துணைத்தலைவர்கள் திரு.Dr.K.தனபாலன்,திரு.N.சரவணண், திரு.S.சுரேஷ்குமார் ஜசக்பால், BABL, திரு.லையன் முருகேசன், M.Com., திரு M.பாலசுப்பிரமணியன்,BCA.,MBA., திரு.S.சுதாகர்,திரு.G.காளீஸ்வர்,.M.Com மற்றும் பலர் கலந்து கொண்டனர். அன்னை தெரசா பேரவையின் துணைத்தலைவர் K.ஸ்டாலின்,BABL அவர்கள் நன்றியுரை வழங்க முதல் நாள் துவக்கவிழா இனிதே நிறைவுற்றது.

**வருந்துகிறோம்:**

அன்னை தெரசா பேரவையின் மதுரை மாவட்டத்தலைவர் திருமதி. தமிழரசி அவர்களின் தாயார் சின்னதாய் அவர்கள் கடந்த 8.11.2010 அன்று அகால மரணம்மடைந்தார்கள். அன்னாரின் மறைவுக்கு அன்னை தெரசா பேரவையின் சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

## நிர்வாகிகள் நியமனம்:

அன்னை தெரசா பேரவையின் விழுப்புரம் மாவட்டத்தலைவராக திரு.கமலநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நாமக்கல் மாவட்ட, பரமத்தி வட்டார நிர்வாகிகளாக திரு.R.K.அங்கமுத்து தலைவராகவும், திரு.K.P.சீனீவாசன் துணைத் தலைவராகவும், திருமதி.கே.ஜி.காவேரி, செயலாளராகவும்,திரு. S.P.அங்கமுத்து, துணை செயலாளராகவும், திரு. ஆர்.ஏ.செல்லப்பன் பொருளாளராகவும், திரு.S.வடிவேல், திரு.எ.ரங்கநாதன், திரு.எ.மாதவன், திரு.கே.ஆறுமுகம், திரு.எஸ்.தங்கராஜ், திரு.எ.குமாரசாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டு உள்ளார்கள்.

கேரளா மாநிலம், கொல்லம் மாவட்டம், பாரிப்பள்ளி பஞ்சாயத்து அன்னை தெரசா பேரவை நிர்வாகிகளாக திரு.பீதாம்பரன் தலைவராகவும், திரு.லதிப், திரு.விஜயன் ஆகியோர் துணைத்தலைவர்களாகவும், திரு.அஷ்ரப் செயலாளராகவும், திரு.ஸ்ரீதரன், திரு.அஹமத் ஆகியோர் இணைசெயலாளர்களாகவும், திரு.துளசிதரன் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். கொல்லம் மாவட்ட கமிட்டி விரைவில் அறிவிக்கப்படும்.

கர்நாடக மாநில அன்னை தெரசா பேரவை பொதுசெயலாளராக திரு.விஜயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

**செய்திசுருள்:**

அனாதையாக இறந்துகிடந்த பிச்சை எடுத்துவந்த வயதான மூதாட்டியின் பையில் ரூ.35,000/- பணம் இருந்தது.

நன்றி,

**"Service to mankind is Service to God"**